MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume :5 /Issue 5 / November 2025 E-ISSN 3049-3676 (Online)

மேன்மதி கோவை தமிழ் மன்றம்

சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

MENMATHI KOVAI TAMIL MANDRAM

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS

# இமையத்தின் சாவுச்சோறு காட்டும் சமூக அவலங்கள்

**த. அருணாதேவி,**
**முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,**
**கருப்பண்ணன் மாரியப்பன் கல்லூரி,**
**செட்டியார் பாளையம், முத்தூர், திருப்பூர் மாவட்டம்-638105**
**நெறியாளர்**

**முனைவர் இரா. செங்கோட்டுவேல்,**
**உதவிப் பேராசிரியர்,**
**தமிழ்த்துறை, கருப்பண்ணன் மாரியப்பன் கல்லூரி,**
**செட்டியார் பாளையம், முத்தூர், திருப்பூர் மாவட்டம் -638105**

## SOCIAL MISERIES IN IMAIYAM'S SAAVUSORU

**D. ARUNADEVI**
**Doctoral researcher, Dept of Tamil**
**Karuppannan Mariappan College**
**Chettiyarpalayam, Muthur. Tirupur Dt. Pin- 638105.**
**9789656777**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume :5 /Issue 5 / November 2025 E-ISSN 3049-3676 (Online)

**GUIDE**

**DR R. SENGOTTUVEL**

**Assistant Professor, Dept of Tamil**

**Karuppannan Mariappan College, Chettiyarpalayam, Muthur.**

**Tirupur Dt. Pin- 638105.**

**9976335762**

**Abstract**

There is a close relationship between society and Literature. A creator who observes society closely creates as Literature that which has affected them. Imaiyam is one of the foremost writers of TamilNadu. One of his short stories is 'Saavusoru'. This short story realistically portrays social evils. It reveals the unequal events of social life. This short story by Imaiyam is registered with the intent of raising a voice against caste frenzy.

**ஆய்வுச் சுருக்கம்**

சமுதாயத்திற்கும் இலக்கியத்திற்கும் நெருக்கமான உறவு உண்டு. சமுதாயத்தை உற்றும் நோக்கும் படைப்பாளி தன்னைப் பாதித்த ஒன்றையே இலக்கியமாகப் படைக்கிறார். தமிழகத்தின் தலைசிறந்த எழுத்தாளர்களுள் ஒருவராய் திகழ்பவர் இமையம், அவரது சிறுகதைகளில் ஒன்று சாவுச்சோறு. இச்சிறுகதை சமூக அவலங்களைத் தத்ரூபமாக எடுத்துக் காட்டுகின்றது. சமூக வாழ்க்கையின் சமநிலையற்ற நிகழ்வுகளைப் புலப்படுத்துகின்றது. இமையத்தின் இச்சிறுகதை சாதிய வெறியை எதிர்த்துக் குரல் கொடுக்கும் வகையில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**முன்னுரை**

எழுத்தாளர் இமயம் அவர்களின் எழுத்துகளில் வெளிவந்த 'சாவுசோறு" என்னும் சிறுகதை, சமூக சிக்கல்களையும், சாதி சார்ந்த

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume :5 /Issue 5 / November 2025 E-ISSN 3049-3676 (Online)

பிரச்சனைகளையும், பெண்ணியல் சிந்தனைகளையும் எடுத்துரைக்கிறது. வளர்ந்து வரும் சமூகத்தினிடையே பலநிகழ்வுகள் நன்மையையும், தீமையையும், ஏற்படுத்துகின்றன. பல இடங்களில் மனிதநேயம் உதிர்கிறது. சில இடங்களிலேயே மனித நேயம் மலர்கின்றது. சாவு சோறு என்னும் இச்சிறுகதை சமூகத்தின் அவல நிலை மற்றும் அதனிடையே நிகழும் ஒரு தாயின் பாசப் போராட்டங்கள் போன்றவற்றை எடுத்து உரைக்கின்றது.

**உள்ளடக்கம்**

கதையின் தொடக்கத்தில் பள்ளிக்கூடம், பள்ளிக்கூடமாய் தன் மகளைத் தேடிச் செல்லும் வயதான பெண்மணி பூங்கோதை தான் சந்திக்கும் பள்ளிக்கூட துப்புரவுத் தொழிலாளியாகிய கமலாவிடம் தன் கதையைச் சொல்கிறாள். இருபத்து ஐந்து பக்கங்களைக் கொண்ட இக்கதையில் 11 ஆவது பக்கத்தில் இந்த இருவருக்குமான உரையாடல் ஆரம்பமாகிறது. அதுவரை பூங்கோதை தன் மகளான அம்சவள்ளியைத் தேடி பள்ளிக்கூட வாசலில் நிற்பதும், ஆட்டோ பிடித்து கமலா இருக்கும் பள்ளியை அடைவதும் காட்டப்படுகின்றது.

கமலா பல வேலைகளுக்கு இடையிலும் பரிதாபத்தின் காரணமாகவே பூங்கோதையை மரத்தடியில் அமர வைத்து அவளது கதையைக் கேட்கிறாள். பூங்கோதையின் கதை கமலாவின் நெஞ்சை அதிரச் செய்கின்றது. பூங்கோதையின் மகள் அம்சவள்ளி வேறு சாதிக்காரனைக் காதலித்து மணம் செய்ய வீட்டை விட்டு வெளியேறுகிறாள். இது அந்த ஊரில் விபரீத சண்டையாகி அவள் உயிரோடு இருக்கும் போதே அவளுக்கு கருமாதி செய்து ஊருக்கு சாவு சோறு போடுகின்றனர். மேலும் அவளை கொலை செய்ய ஊர் ஊராகத் தேடி அலைகின்றனர்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume :5 /Issue 5 / November 2025 E-ISSN 3049-3676 (Online)

அம்சவள்ளியின் காதலனின் தாயை முலையை அறுத்து அவமானப்படுத்த அவள் தற்கொலை செய்து கொள்கிறாள்.அவர்கள் போட்ட சாவு சோற்றையும் உண்டு விட்டு பூங்கோதை தன் மகளைத் தேடி அலைகின்றாள்.

**சாதிய அவலம்**

சாதியின் பெயரால் நம் சமூகத்தில் பல இன்னல்கள் நடந்து கொண்டே இருக்கின்றன. எனவே 'மதக்கொடுமை ஒழிந்தாலன்றி சமுதாயம் தன்மானத்தோடு வாழ இயலாது"[1] என வால்டர் சுட்டிக் காட்டுகின்றார்.

சாதி என்ற சொல் (Caste) இனம், மரபுக்குழு, வகை என்பவற்றைக் குறிக்கின்ற 'காஸ்டா" (Casta) என்ற போர்த்துக்கீசியச் சொல்லில் இருந்து வந்ததாகும். முதன்முதலில் 1563 இல் கார்சியா டி ஓரெட்டா என்பவர் இந்தச் சொல்லை ஒரு வரையறைக்கு உட்பட்ட பொருளில் 'சாதி" என்று கையாண்ட பிறகே உலக வழக்கிற்கு வந்தது என்று சொல்லின் தோற்றம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். ஹட்டன் (Hutton) என்ற சமூகவியல் அறிஞர்"[2] என்று செயராணி ராசதுரை சாதியின் தோற்றம் குறித்து மேற்கோளிட்டுள்ளார்.

சமூக ஒற்றுமையை சீர்குலைக்கும் ஒரு ஆயுதமாக சாதி செயல்பட்டு வருகின்றது. சாதிய வேறுபாடுகள் மனிதனுக்கான நல்ல பண்புகளையும், மனித நேயத்தையும் சீர்குலைக்கின்றன. இக்கதையில் தான் முதல் மதிப்பெண் எடுத்ததால் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடிய அம்சவள்ளியின் தந்தையாலும், அவளது சகோதரர்களாலும் அவள் சாதியைச் சார்ந்த ஒருவனை விரும்பி மணம் செய்து கொள்வதை ஏற்றுக்கொள்ள இயலவில்லை.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume :5 /Issue 5 / November 2025 E-ISSN 3049-3676 (Online)

அவளைக் கொல்லத் தேடி அலைகின்றனர். இந்நிலையில் அவள் மீது அவர்கள் கொண்ட அன்பு கேள்விக்குறியாகிறது.

அவள் உயிருடன் இருக்கும் போதே அவளுக்கு கருமாதி செய்து குடும்பமாக மொட்டையடித்துக் கொள்கின்றனர். அவள் மீது அவர்கள் கொண்ட அன்பும், அவர்களுக்கு இடையேயான பிணைப்பும் இறந்து விட்டதா? என்னும் கேள்வி மனதில் எழுகின்றது.

மேலும் அம்சவள்ளியின் காதலனின் தாய்க்கு நேர்ந்த கொடூரம் சமூக அவலத்தின் உச்சம். வீட்டை விட்டு வெளியேறிய காதலர்களை தேடிச் செல்லும் பெண் வீட்டார் அவள் காதலனின் தாயின் முலையை அறுக்கின்றனர்.

இதனால் அவமானம் அடைந்த அந்தப்பெண் தன்னைத் தானே தூக்கிலேற்றி தன் வாழ்வை முடிக்கிறாள். குற்ற உணர்வு ஏதுமின்றி அம்சவள்ளியின் தந்தையும், சகோதரர்களும் இருக்கின்றனர். இத்தகைய சமூக அவலங்கள் இக்கதையில் மிகவும் இயல்பாகச் சித்தரிக்கப்படுகின்றன.

**பெண்ணியல் அவலம்**

மனித சமுதாயத்தை மேம்படுத்தும் ஒரு கருவி பெண். அவள் இல்லை என்றால் மனித வர்க்கமே இல்லை எனக் கருதலாம்.

சமுதாயத்தில் பெண் வர்க்கத்தை இழிவாக நினைப்பதும், ஒதுக்குவதும், துன்புறுத்துவதும் பொதுவாகக் காணப்படுகிறது. இதனை மையப்படுத்தியே இக்கதை அமைகின்றது. ‘அடக்கம், பொறுமை, தியாகம், பிறநலம், இரக்கம், அழகு, ஒப்புரவு, தொண்டு முதலியவை அமைந்த ஒன்று பெண்மை எனப்படும்”[3] என்பர்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume :5 /Issue 5 / November 2025 E-ISSN 3049-3676 (Online)

‘காலம் காலமாக அடிமைப்பட்டு வதைப்பட்டு வாழும் பெண்களை அடிமைத் தளையிலிருந்து சமூகத்தில் ஆண்களுக்கு இணையான மதிப்பினைப் பெற்றுத் தருவதே பெண்ணியத்தின் நோக்கமும் செயற்பாடும் ஆகும்”[4] எனக் குறிப்பிடுவர்.

பெண்களின் உரிமைகளுக்கு எதிரான அடக்கமுறைகள் இன்றளவும் நிகழ்ந்து கொண்டு தான் இருக்கின்றன. கதையில் அம்சவள்ளியின் தாயான பூங்கோதை மிகவும் துன்பப்படுகிறாள். வேறு சாதிக்காரனை விரும்பி வீட்டை விட்டு வெளியேறிய தன் மகளைத் தேடி அலையும் அவளது நிலை அவலத்திற்குரியது.

‘பெத்த தாயிதான நானு” இன்னது இப்படின்னு எங்கிட்ட ஒரு வாத்த சொல்லியிருக்கக்கூடாது? சண்டாளி போனவ இந்த எடத்தில் இருக்கன், இப்படி இருக்கன். உசுருக்கு ஒண்ணும் பாதகமில்லே. சோறு தின்னன், தண்ணி குடிச்சன், இந்த எடத்துல படுத்து எயிந்திரிச்சன்னு சொன்னா என்னோட ஆவி அடங்கிப்போவாது?”[5] என்று கூறும் பூங்கோதையின் நிலையை அறிய முடிகின்றது.

அம்சவள்ளியின் செயலால் அனைவரிடமும் பூங்கோதையின் வளர்ப்பு தவறாகி விடுகின்றது.

தனது கணவராலும், தான் பெற்ற பிள்ளையாலும் ஒரு பெண்ணாக கேட்கக் கூடாத வார்த்தைகளை எல்லாம் கேட்டுத் துயரப்படுகிறாள்.

தன் கணவன், கோவலனுக்காக வழக்குரைத்து தன் முலையைத் திருகி எரிந்த கண்ணகியைத் தெய்வமாகக் கொண்டாடும் நம் நாட்டில் தான் கலப்பு மணம் செய்த குற்றத்திற்காக ஒரு பெண்ணின் முலையை அறுத்திடும் அவலமும் நிகழ்கின்றது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM   INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume :5 /Issue 5 / November 2025    E-ISSN 3049-3676 (Online)

**பாசப் போராட்டம் :**

பூங்கோதை நகை, பணம் மற்றும் சான்றிதழ்களை ஒப்படைக்க அம்சவள்ளியைத் தேடி அலைகிறாள். இதனால் அவளைக் கொன்று விடுவார்கள் என்று தெரிந்தும் தன் மகளைத் தேடி அலையும் ஒரு தாயின் பாசப் போராட்டம் வியப்பிற்குரியது.

மேலும் அவள் கமலாவிடம் இறுதியில் 'அவனுகளா அவள வவுத்துல வச்சியிருந்தானுவ? அவனுகளா அவளுக்கு பாலு கொடுத்தானுவ? பீ, மூத்தரத்த அள்ளிக் கொட்டுனானுவ? அவளோட பீ மூத்தரத்துணிய அலசிப் போட்டானுவ? என் வவுத்திலிருந்து வெளியே வந்து பூமியிலே வியந்ததிலிருந்து அவனுவுவளா அவ கூட படுத்திருந்தானுவ? அவளுக்கு அவனுவவளா உசுர கொடுத்தானுவ? அவளுக்கு நான் தான் சீவி வுட்டன். சீல கட்டி வுட்டன். அவ தீட்டுத்துணிய நாந்தான அலசிப் போட்டேன். எல்லாக் கருமாதியையும் நான் தான செஞ்சேன்?அதனால தான் அலையுறேன்"[6] என்னும் வரிகள் அவளது தாய்ப்பாசத்தை உணர்த்துகின்றது.

ஆனாலும் பூங்கோதை தான் மகள் வேறு சாதிப் பையனை விரும்பிச் சென்றதை ஏற்றுக்கொள்ள இயலவில்லை தானே?

'ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைநத்து"[7]

ஒரு பிறப்பில் தான் கற்ற கல்வியானது அப்பிறவிக்கு மட்டுமல்லாமல் ஏழு பிறப்பிலும் உதவும் தன்மை உடையது என்கிறார் வள்ளுவர். இக்கதையிலும் அம்சவள்ளியின் கல்விச் சான்றிதழ்களை அவளது தந்தையும் சகோதரர்களும் எரித்து விடுவார்களோ? என்ற பயத்தில் அதனை மறைத்து வைத்து அவளிடம் ஒப்படைத்தால் அவள்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume :5 /Issue 5 / November 2025 E-ISSN 3049-3676 (Online)

அதை வைத்து பிழைத்துக் கொள்வாள் என அவளது தாய் போராடி அலைகிறாள். தான் கற்ற கல்வி என்றும் தன்னைக் கைவிடாது என்பதையும் இக்கதையின் ஆசிரியர் எடுத்தியம்புகிறார்.

## தொகுப்புரை

1. இவ்வாறாக சமூகத்தில் சீர்திருத்தத்தை ஏற்படுத்தும் விதமாக ‘சாவுசோறு” எனும் இக்கதை விளங்குகிறது.

2. மேலும் அமைப்பு, கதைக்களம், கதாப்பாத்திரங்கள் போன்ற கூறுகள் அழகாக இக்கதையில் வரையறுக்கப்படுகின்றன.

3. காலம் காலமாக தாழ்த்தப்பட்ட சமூகத்தினர், மேல்வர்க்கத்தினரால் அடக்கி ஆளப்படுவதை அடையாளப்படுத்துகிறார் இமையம்.

4. மனித நேயமற்ற தன்மையை முன் வைத்துள்ளமை குறிப்பிடற்குரியது.

5. தாயாய், தாரமாய், சகோதரியாய் விளங்கும் பெண்ணினத்தை இழிவுபடுத்தும் நிலையைச் சாட்டைக் கொண்டு சாடும் விதமாக இச்சிறுகதை அமைந்துள்ளது.

## அடிக்குறிப்புகள் :

1. புலவர் என். இராமலிங்கம், செயற்கரிய செய்த பெரியார், ப.218 திருவள்ளுவர் பதிப்பகம், சென்னை.

2. J.H. Hutton, Caste in India, Its Nature function and origin, P.47, மேற்கோள் எடுத்தாள்பவர்: செயராணி ராசதுரை, பெண்கள் படைப்பில் சமூகம், ப.187, வைகை வெளியீடு, பவானி, 1992.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume :5 /Issue 5 / November 2025 E-ISSN 3049-3676 (Online)

3. திரு. வி. கல்யாணசுந்தரம், பெண்ணின் பெருமை, ப.24, சாரதா பதிப்பகம், சென்னை.

4. இரா. பிரேமா, பெண்ணியம், ப.5, பாரி நிலையம்,சென்னை.

5. இமையம், சாவுசோறு, ப.12 க்ரியா பதிப்பகம், சென்னை, 2016.

6. மேலது, ப.25, க்ரியா பதிப்பகம், சென்னை-2016.

7. திருக்குறள் எண். 398 பூம்புகார் பதிப்பகம், சென்னை.